[illegible]

[illegible] [illegible] 5 ம் 1929

JL
Ma211, N24LK.
NX.6.5
224253

சர். மீர் உஸ்மான் அலிகான் பகதூர்.

அலிகான் பகதூர் ஆகிய மூவர்களும் மிக்க புகழ் பெற்றவர்கள் ஆவார்கள்.

அம் மூவருள்ளும் தற்கால நிஜாம் மன்னரே முதன்மை ஸ்தானம் பெறுதற்கு உரியவர். சமஸ்தானத்தை ஸ்தாபனம் செய்து உறுதியான அஸ்திவாரம் போட்டதினுல் முதல் ஆஸப்ஜா நிஜாம் மன்னரும், சமஸ்தானம் மிக நெருக்கடியான நிலைமையிலிருந்த காலத்தில், மிக்க சாமர்த்தியமாக நிர்வாகம்செய்து சமஸ்தானம் ஆபத்துக்குள்ளாகாமல் காப்பாற்றியதனுல் இரண்டாவது ஆஸப்ஜா நிஜாம் மன்னரும் கீர்த்தி பெற்றனர்.

தற்கால நிஜாம் சர். உஸ்மான் அலிகான் பகதூர் அவ்விருவரையும் விடச் சிறந்தவர் என்பதற்குக் காரணங்கள் பல வாகும். இவர் சிறந்த ராஜதந்திர நிபுணர். குடிகள் முன்னேற்றத்தில் மிக்க ஆர்வங் கொண்டவர். சீர்திருத்தப் பிரியர். "குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னர்." எனவே "அவரது அடிதழீஇ" நிஜாம் உலகம் நிற்கின்றது.

சீர்திருத்தங்கள்.

சமஸ்தான முன்னேற்றத் திற்காக நிஜாம் அவர்கள் செய்துள்ள சீர்திருத்தங்கள் அநந்தம். அவற்றை முற்றிலும் விளக்க இப்பத்திரிகை இடம் கொள்ளாது. எனினும் ஒரு சிறிது சுருக்கமாகக் கூறுகிறோம்.

நீதிபரிபாலனமும் நிர்வாகமும்.

முன்னம், நீதிபரிபாலனமும் தேச நிர்வாகமும் ஒரே அதிகாரியிடம் இருந்து வந்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் இப்பொழுதும் அம்முறையே பின்பற்றப்பட்டு வருகிறது. நீதிபரிபாலனத்தையும், நிர்வாகத்தையும் பிரிக்கும்படி இந்தியத் தலைவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் ஒன்றும் பலித மாகவில்லை. ஆனுல் நமது நைஜாம அரசர், தமது சமஸ்தானத்தில் அவ்விரு இலாகாக்களையும் வேறுபிரித்து விட்டார். இந்த ஏற்பாடு குடிகளுக்கு மிக்க நன்மை யளிக்கக்கூடியது என்பதற்குத் தடையில்லை.

கல்வி அபிவிர்த்திக் காகவும் அவர் அனந்தம் ஏற்பாடுகள் செய்திருக்கிருர். வருஷா வருஷம் கல்வி யிலாகாவிற்காக 80 லட்சம் ரூபா செலவு செய்யப்படுகிறது. இப் பொழுது நிஜாம் ராஜ்யத்தில் 7 காலேஜ்கள், 43 ஹைஸ்கூல்கள், 108 மிடில் ஸ்கூல்கள், 3979 பிரைமரி ஸ்கூல்கள், 49 பிரைவெட்டு பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக் கின்றன. இப்பள்ளிக்கூடங்களில் மொத்தம் 2,71,857 மாணவர்கள் கல்வி பயின்று வருகிருர்கள். அவர்களுக்குள் முஸ்லிம்கள் 93,287. பிராமணர்கள் 19,985. பிராமண ரல்லாதார் 1,46,843. கிறிஸ்தவர்கள் 41,295. பார்சிகள் 230. ஒடுக்கப்பட்டவர்கள் 5068. ஆசிரியர்களைப் பழக்கும் பொருட்டு ஆடவர்களுக்கு மூன்றும், பெண்களுக்கு நான்கும் டிரேயினிங் ஸ்கூல்களும் ஸ்தாபிக்கப் பட்டிருக் கின்றன. மொத்தம் 35,000 பெண்கள், அப்பள்ளிக் கூடங்களில் படித்து வருகிருர்கள். பெண் கல்விக்கு மொத்தச் செலவு 7 லட்சம் ரூபா.

உஸ்மானியா சர்வ கலா சங்கம்.

இந்தியாவிலே "தேசியக்கல்வி, தேசியக் கல்வி" எனப் பெருங் கூச்சல் கேட்கப் படுகின்றது. ஆனுல் உருப்படியான முயற்சி ஒன்றும் தேசத் தலைவர்களோ சர்க்காரோ செய்ததாகத் தோன்றவில்லை. நிஜாம் மகாராஜா இந்த உஸ்மானியா சர்வ கலா சங்க ஸ்தாபனம் மூலம் இந்தியாவுக்கு ஒரு நல்வழி காட்டி யிருக்கிருர். இந்த சர்வகலா சங்கத்தில் போதனை முழுதும் சுதேச பாஷையான உருது மூலமே நடைபெறுகிறது. உருது பாஷையில் தேவையான பாடப்புத்தகங்கள் இல்லாக் குறையை நீக்கும் பொருட்டு சர்வகலா சங்கத்தில் ஒரு பிரசுர சாலையும் ஏற்படுத்தப் பட்டிருக் கிறது. சரித்திரம், பூகோளம், தத்துவ சாஸ்திரம், கணிதம், சட்டம், வைத்தியம், இஞ்சினீயரிங் முதலிய விஷயங்களைப்பற்றி சுமார் 200-க்கு மேற்பட்ட பாடப் புத்தகங்கள் இதுவரை வெளியிடப் பட்டிருக்கின்றன. இன்னும் சுமார் 100 புத்தகங்கள் அச்சிலிருக்கின்றன. இன்னும் இரண்டு மூன்று வருஷங்களில் உருது பாஷையில் பாடப் புஸ்தகப் பஞ்சம் ஒழிந்து விடுமென்று உறுதியாகக் கூறலாம்.

விவசாயம், கைத்தொழில் முதலியவைகளை விருத்தி செய்வதற்கும் பலப்பல பெரிய ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. விரிவஞ்சி அவற்றை ஈண்டு விளக்க முயலவில்லை.

நிஜாம் அரசர் குணவிசேஷம்

நிஜாம் ஒரு உத்தம முஸ்லீம். இஸ்லாமிய சட்டதிட்டங் களுக்கும் மார்க்கக் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டே நடந்து வருகிருர். விச்வ சகோதரத்துவமும் சமத்துவமுமே இஸ்லாம் மார்க்கத்தின் மூலக் கொள்கைகள்.

வெஸ்ட் மினிஸ்டர் கவுண்டி ஹாலில் 500 மின்சார கடிகாரங்களிருக்கின்றனவாம்.

* * *

கிளாஸ்கோ நகரத்தில் இரண்டணுவிற்கு, ஒருவர் 23 மைல் தூரம் டிராம் வண்டிகளில் பிரயாணஞ் செய்ய முடிகிறது.

* * *

ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கவி இயற்றியுள்ள நாடகங்களில் காணும் வார்த்தைகளில் மிகப் பெரிது 25 எழுத்துகளையுடைய ஒரு வார்த்தையாகும்.

* * *

மனிதன் சரீர சுகத்திற்கு எத்தகைய பாதகமும் விளைவித்துக் கொள்ளாமல் 16,500 அடி உயரம் வரையில் மேலே செல்லலாமென ஒரு நிபுணர் கூறுகிருர்.

* * *

சென்ற 8 வருஷ காலத்தில் ஸ்காத்லாந்தின் மொத்த ஜனத் தொகையில் 9000 பேர்தான் அதிகமா யிருக்கின்றனர். ஆனுல் இங்கிலாந்திலும் வேல்சிலுமோ 15 லக்ஷம் ஜனங்கள் அதிகரித்திருக்கின்றனர்.

* * *

மணிக்கு 815 மைல் வேகத்தில் பறந்து செல்லத்தக்க ஒருவகை ஈயை வேட்டையாடுவதற்கு ஈ வேட்டைக் காரர்கள் மிக நுண்ணிய மணல் நிரப்பிய தோட்டாக்களை உபயோகித்து வருகின்றனர்.

* * *

இங்கிலாந்தில் சென்ற வருஷம் 28,65, 367 நாய்களுக்கு லைசென்ஸ் கொடுத் திருக்கிருர்கள். 1921-ல் 18,88,140 நாய்களுக்கு லைசென்ஸ் கொடுத்தனர். 1385-ல் 9,05091 நாய்களுக்கு மாத்திரமே அங்கு லைசென்ஸ் வாங்கி யிருக்கின்றனர்.

* * *

ஒரு வருஷ காலத்தில் அடுப்பு முதலியவைகளினின்றும் வெளிக்கிளம்பும் புகையானது காற்றோடு கலந்து பிறகு பூமியில் வந்து சேரும் கரி, உலகம் முழுதுமுள்ள சுரங்கங்களில் மூன்று நாட்களில் எவ்வளவு கரியை எடுக்கிருர்களோ அதற்குச் சமானமா யிருக்கிறது.

* * *

ஜெர்மன் தலைநகராகிய பெர்லினில், தெருக்களிலுள்ள கெடிகாரக் கூண்டுகளுக்குக் கீழ் அவசர வைத்திய உதவிக்கான சாமான்களையெல்லாம் எப்பொழுதும் தயாராக வைத்திருக்கிருர்கள். காயம்பட்டவர்களைப் படுக்க வைத்துத் தூக்கிக்கொண்டு போவதற்கான வசதிகளையும் செய்து வைத்திருக்கின்றனர்.

* * *

லண்டனில் ஈற்ற சங்க லிமிடெட் என்றும், வதந்தி லிமிடெட் என்றும் இரு புதிய கம்பெனிகளை ஆரம்பித்திருக்கிருர்கள். முதல் கம்பெனி புத்தகங்களைப் பிரசுரித்து, புத்தக வியாபாரஞ் செய்ய முற்பட்டிருக்கிறது. பிந்திய கம்பெனியாகிய 'வதந்தி' கம்பெனியாரோ நாடகசாலைகளை அமைத்து அவற்றை நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். கம்பெனிகளுக்கு நல்ல பெயர் தான்!

* * *

இங்கிலாந்தில் பான்பரி என்ற ஸ்டேஷனை விட்டு ரயில் வண்டி புறப்பட்டு கொஞ்ச தூரஞ் சென்றதும் ஒரு பெண் சங்கிலியைப் பிடித்திழுக்கவே வண்டி நின்று விட்டது. கார்டு உடனே அப்பெண்ணிடம் வந்து சமாசாரமென்ன வெனக் கேட்டபோது, அவள் "ஸ்டேஷனில் பழம் விற்ற பையனிடம் 8 அணு கொடுத்து 6 அணுவிற்குப் பழம் வாங்கிக் கொண்டேன். அவன் பாக்கி சில்லறையைக் கொடுக்க மறந்துவிட்டதால் அதை வாங்கிக்கொண்டு வந்து ஏறுவதற்காக வண்டியை நிறுத்தினேன்" என்ருளாம்.

* * *

எங்கள் சித்திரப் பத்தி

பகிஷ்கார நாடகம்.

முதல்தலைவர் :—"நானில்லாத ஒரு கமிஷனும் கமிஷனு? இந்த கமிஷனை பகிஷ்கரித்து விடுங்கள்; பகிஷ்கரித்து விடுங்கள்"

இரண்டாவது தலைவர் :—"இந்தியாவின் தலையெழுத்தை வெள்ளையர்களா நிர்ணயம் செய்வது? இந்தியர் சுயமரியாதை அடியோடு கவிழ்ந்து விட்டது. கமிஷன் பகிஷ்காரம் செய்யுங்கள்! சொன்னேன்! சொன்னேன்."

மூன்றாந் தலைவர் :—"வேலை நிறுத்தம் செய்யுங்கள். கமிஷன் போகிற இடமெல்லாம் ஹர்த்தால் நடத்துங்கள்! கறுப்புக் கொடி காட்டுங்கள்"

நாடகம் பார்க்கிறவர்கள் :—"நாடகம் நன்றாகத் தானிருக்கிறது. ஆனால் இது காமெடியா? டிராஜடியா?"

பெயர்ப்பில்—In waters there is healing balm நீரிடத்து நோய் நீக்கும் மருந்தமைந்திருக்கின்ற தென்பர்.

அப்ஸு மெ ஸோமொ அப்ரவீத்
அந்தர் விச்வாநி ஹ்ரபேஷஜா
அக்நிம் ச விச்வ சம்புவம்
ஆபச்ச விச்ச ஹ்ரபேஷஜீ:

இருக்கு. 1-23-20.

"நீரில் மருந்துக ளெல்லாம் நிலைத்தலால் என்னைச் சோமனென்று கழறுகின்றனர். நெருப்பு நலந்தருவதா யிருப்பது போன்று, நீரில் மருந்துக ளெல்லாம் நிலவுகின்றன." அறிஞர் கிரிபித் மொழிபெயர்ப்பு within the waters....dwell all balms that heal... waters hold all medicines.

இதமாப: ப்ரவஹத யத்கிஞ்ச துரிதம் மயி

இருக்கு. 1-23-22.

"நம்பாலுறையும் சிறு அழுக்கினையும் நீர் நீக்குகின்றது." இத் தொடர் உடலின் எல்லாக் குறைகளையும் தண்ணீர் அகற்றுவதென்றறைகின்றது. "துரிதம்" (து:-இத) உடலகத் துறையும் மாசுகள். உடம்பில் தங்கும் இனமற்றகெட்ட பொருள் (Foreign matter) உட்சென்று நோய் தோற்றுவித்தலால் (து—இத-துர்கத) துரித மெனப்படும். இது தான் பாவம். இதனை உடம்பினின்று வெளிப்படுத்துவதும், உடம்பினைத் தூய்மைப்படுத்துவதும் நீரின் செயல். நீரினால் உடம்பின் அகப்புறத் தூய்மை பெற்று உடல் நல னெய்தல் இன்றியமையாதது.

ஆப இத்வா உ பேஷஜீ ராபோ
அமீவசாதநீ : ஆப : ஸர்வஸ்ய
பேஷஜிஸ்தே க்ருண்வந்து பேஷஜம்.

இருக்கு. 10-137-6.

"நீர் உறுதியாக மருந்து. நீர் உறுதியாக எல்லாப் பிணிகளையும் போக்குகின்றது. நீர் எல்லாப் பிணிகளுக்கும் மருந்து. அந் நீர் நுமக்கு மருந்தாகுக." அறிஞர் கிரிபித் மொழி பெயர்ப்பு—The waters have their healing power, the waters drive diseases away. The waters have a balm for all; let them Make Medicene for thee. இதற்குமேல் நீரினைக் குறித்து வருணிக்க வேண்டாவாம்.

இவ்விதம் அமுதமயமான நீர் இருக்கின்றது. இத் தூயநீரைப் பருகாது பிற பானப் பொருட்களைக் கொள்வது எஞ்ஞான்றும் கெடுதி. கள் சாராயம் தேயிலை காபி சோடா முதலிய பானப் பொருட்களைப் பருகுதல், தூய நீரருந்துவதோ டொப்ப நோக்கின் பெரிதும் கேடு விளைப்பதாகும். அறநெறியினர் வேதநெறியே வாழ்க்கை நடாத்த விழைவோர், பிற கேடுசூழும் பானங்களை யொழித்துத் தூயநீர் பருகித் தூய நீராடி அகப் புறத் தூய்மை பெற்று உடல் நலனும் வளனுமெய்தி நீண்டநாள் அறநெறியே வாழ்ந்திடுக.

திரு. வி. கலியாண சுந்தர முதலியார் :—

கோயில்கள் சாதிப்பேய் நுழைந்த இடம். ஒரு கூட்டத்தார் இங்கும் மற்றொரு கூட்டத்தார் உங்கும் இன்னொரு கூட்டத்தார் அங்கும் கடவுளை வழிபடவேண்டுமாம். கடவுள் முன்னிலையிலும் உயர்வு தாழ்வா? கடவுள் உருவங்களின்மீது ஈக்கள் மொய்க்கின்றன, பல்லி, எலிகள் ஓடுகின்றன. இவைகளுக்கெல்லாம் இறைவனைத் தொடும் உரிமை யிருக்கும்போது மனித உடல் தாங்கியுள்ள ஒருவனுக்குத்தானா தடை! சாதியார் கொடுமை என்னே! என்னே!

மஹா மேன்மை தங்கிய

ஹைதராபாத் நிஜாம் மன்னர்.

இம்மாத ஆரம்பத்தில் நிகழ்ந்த, மஹா மேன்மை தங்கிய ஐத்ராபாத் நிஜாம் மன்னர் விஜயம், சென்னைமா நகர சரிதத்தில் ஒரு முக்கிய சம்பவமாகும். நிஜாம் மகாராஜா அவர்கள் சென்னைக்கு இப்பொழுது தான் முதன் முதலாக விஜயம் செய்தார். அவரது விஜயம் ஒரு அந்தரங்க விஜயமாக இருந்தும், சென்னைமா நகரத்தாரெல்லாம் ஜாதி மத வித்தியாசமின்றி ஒன்றுகூடி அம்மன்னர் பெருமானுக்கு ராஜோபசாரம் செய்து கௌரவப் படுத்தியதை உற்று நோக்கினால், நம்மவர்கள் அவர் மீது வைத்திருக்கும் பக்தியின் அளவு நன்கு விளங்கும்.

இந்திய சுதேச சமஸ்தானங்களில் நிஜாம் ராஜ்யம் பிரதம ஸ்தானம் வகிக் கின்றது. அதன் விஸ்தீரணம் 82, 698 சதுரமைல். ஜனத்தொகை 12,453,627. இத்தொகையில் சுமார் பத்தில் ஒரு பகுதியினர் முஸ்லிம்களாக இருக்கிறார்கள்.

இந்த சமஸ்தானத்துக்கு நிஜாம் ராஜ்யம் ஐத்ராபாத் ராஜ்யம் என இருபெயர்கள் உண்டு. நிஜாம் என்னும் அரபி பதத்துக்கு நிர்வாகம் செய்பவர் என்பது பொருள். இந்த சமஸ்தானத்தின் முதல் நிர்வாக அதிகாரிக்கு, மொகலாய சக்கரவர்த்தியால் நிஜாமுல் முல்க் என்ற பட்டம் அளிக்கப் பட்டது. அந்தப் பட்டப் பெயருக்கு நாடு ஆள்பவர் என்பது பொருள். எனவே அவர் ஆளும் நாட்டுக்கு நிஜாம் ராஜ்யம் எனப் பெயர் வழங்கலாயிற்று. இந்த சமஸ்தானத்துக்கு ஐத்ராபாத் தலை நகராயிருப்பதால் ஐத்ராபாத் ராஜ்யமென்றும் அதற்கு வேறொரு பெயருண்டு. இந்த சமஸ்தானத்தை ஸ்தாபித்தது முதல் நிஜாம் நவாப் மீர் காம்ருதீன் கானுக்கு "அசப்ஜா" என்றபட்டப் பெயர் இருந்ததினால் அவரது வழித் தோன்றல்களாகிய மன்னர்களுக்கு அசப்ஜா என்ற பட்டம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் இந்த சமஸ்தானத்துக்கு அசப் சமஸ்தானம் அல்லது அகலபியா அரசாங்கம் என்று மற்றொரு பெயரும் உண்டு.

பூர்வ சரிதம்.

டெல்லியில் மொகலாய சக்கரவர்த்திகள் அரசாண்ட காலத்தில், அவர்களது ஆட்சிக்கு உட்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் நிர்வாக சௌகரியங் கருதி ஒவ்வொரு பிரதிநிதியை நியமித் திருந்தனர். கடைசி மொகலாய சக்கிரவர்த்தியான ஔரங்கசீப் காலத்தில் உண்டான குழப்பங்களின் பயனால், டெல்லி சக்கரவர்த்திகளின் ஏஜண்டாக இருந்த நிர்வாக உத்தியோகஸ்தர்களெல்லாம், சக்கரவர்த்தியின் ஆணையிலிருந்து விடுபட்டு சுதந்தர அரசர்களாய் ஆட்சி புரியத் தொடங்கினார்கள். இந்த நிஜாம் சமஸ்தானமும் அவ்வாறு ஸ்தாபனம் பெற்ற ஒரு சமஸ்தானமே. 1712-ல் கவர்னராக நியமனம்பெற்ற கம்ருத்தீன்கான் நைஜாமுல் முல்க், 1742-ல் சுயேச்சையாக நைஜாம் ராஜ்யத்தை ஸ்தாபித்து அதன் முதல் மன்னராக சிங்காதனம் ஏறினார். இவரே நிஜாம் சமஸ்தான ஸ்தாபகர்.

நமது நிஜாம் மன்னர் வம்சம் மிக்க பெருமை யுடையது. முஸ்லிம் உலகில் கீர்த்தி வாய்ந்த முதல் கலீபா வாகிய ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் குடும்பத்துக்கும், நமது நைஜாம் மன்னரின் ஆதி மூதாதையாகிய ஆஸப்ஜா குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்று வமிசாவளி சரித்திரம் கூறுகின்றது.

சர். மீர் உஸ்மான் அலிகான் பகதூர்.

நமது மஹாமேன்மை தங்கிய ஆஸப்ஜா முஜப்பருல் முமாலிக் நைஜாமுல் முல்க் நிஜாமத் தௌலா நவாப் சர். மீர் உஸ்மான் அலிகான் பகதூர், பத்ஹே ஜங் அவர்கள் 1896-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் தேதி பிறந்தார்.

நமது நிஜாம் சமஸ்தானம் ஸ்தாபனமாகி இற்றைக்கு 200 வருஷங்கள் ஆகின்றன. இந்த 200 வருஷ காலத்திலும் இந்த சமஸ்தானத்தை ஆண்ட மன்னர்களில் (1) முதல் ஆஸப்ஜா மீர் கம்ருத்தீன்கான் (2) இரண்டாவது ஆஸப் ஜா மீர் நிஜாமலிகான் நிஜாமுல் முல்க் (3) தற்கால நிஜாம் சர். மீர் உஸ்மான்

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும் எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களை குறித்துக் கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிர வேறு எவரும் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக் கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ் பரிபாஷை. சொல்ப காபிகளே கையிருப்பிலிருக்கிறது. முந்துங்கள்.

விலை அணா. 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீனமாதாந்தர பத்திரிகை இதுவரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்கு புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்யாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச் செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்றமடையக்கூடிய வழியையும் போதிப்பதை பிரதி மாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபாரிசு இல்லாமல் தாங்களே சந்தாதாரராவீர்களென்பது நிச்சயம் பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளி வரும். வருஷ சந்தா ரூ 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,

அமிர்த குணபோதினி ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! 10-ம் பதிப்பு வெளி வந்து விட்டது

ஆங்கில ஆசான்

(எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள். போலிப் புத்தகங்களால் ஏமாற வேண்டாம்)

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசபாடங்களாக வகுத்து முன் பதிப்புகளை விட அதிக பக்கங்கள் சேர்த்து பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களைவிட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தகங்களை வைத்திருப்பவர்கள் கூட பத்தாம் பதிப்பை பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 300 ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு செய்தது.

விலை ரூபா 2 0 0

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ரெடிமேட் ஷர்ட்டுகள்.

உசத்தியான, டுயில், டோரியா காக்கி, பாப்ளின் முதலிய துணிக ளில் தைத்தவை. உறுதியான தை யல். மனோகரமான கட்டிங் கழுத் தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

டுயில் ஷர்ட்டு	ரூ. 2 0 0
காக்கி	,, 2 4 0
அமெரிக்கன் டோரியா	,, 2 4 0
பாப்ளின்	,, 3 8 0
ஸில்க் ஷர்ட்டு	,, 6 8 0

கே. எஸ். முத்தையா கம்பெனி : தபால் பெட்டி 99, மதராஸ்.

நீங்கள் புதிய வாழ்வு, யௌவன வாழ்வு, ஆண்மை வாழ்வு, இன்ப வாழ்வு, நோயற்ற வாழ்வு அடைய விரும்புகிறீர்களா ?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மறுக்க முடியுமா ?

உண்மையில் நீங்கள் நோயற்ற வாழ்வு, யௌவன வாழ்வு விரும்பினால் இன்றே,

"வீ ர சி ங் க லே ஹி ய ம்"

அனுப்பும் படி எழுதுங்கள். எவ்விதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனியைப் போல பறந்துவிடும்.

வீரசிங்க லேஹியம் இரத்தத்திற்குச் சுத்தியும் விருத்தியும் உண்டாக்கி நோய்களைத்தொலைத்து உடம்பை வஜ்ரம் செய்கிறது. எல்லா நோய்களையும் அகற்றவல்லது. தலைநோய், மந்தம், மயக்கம், முதலியவைகளைத் தடுக்கிறது. தாதுவிற்கு அதிசய அபார ஆச்சரியப்படும்படியான வீரபலத்தைக் கொடுக்கிறது. மேக சம்பந்தமான சகல நோய்களையும் உடனே தொலைக்கிறது.

40 நாள் சாப்பிடக்கூடிய டப்பி **1**-க்கு ரூ. **4—8.**

பாக்கிங் தபால் செலவு இனாம்.

சிங்கப்பூர், பினங்கு, மலாய் ஸ்டேட் நண்பர்கள் மூன்று டப்பிகளுக்கு ஆர்டர் செய்தால், தபால் செலவு, பாக்கிங் செலவு இனாம்.

வைத்ய ஆஸ்ரமம், அகஸ்திய குண்டம், காசி.

வாயுவுங் கலந்து நீரின் தோற்ற மெடுக்கின்றது. இது மேற்செய்யுளின் கருத்து. "யான் பூத தக்ஷமித்திர வாயுவையும், ரிசாதஸ வருண வாயுவையும் ஏற்கின்றேன். இவ்விரண்டுங் கலந்து நீர் தோன்றுகின்றது." இஃது மேற் செய்யுளின் சொற் பொருள். இச் சொற்களி லமைந்திருக்கும் உட்பொருள் ஊகிக்கத் தக்கதாம்.

இவ் வருணனைகளால் தண்ணீருக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் "ஜந்ம" என்னும் பெயர் எத்துணை பொருள் நுட்பமுடையதென உணர்ந்திடுக. மித்திர வருணர்களுக்குத் தண்ணீரொடுள்ள தொடர்பும் மித்திரா வருணன் கதையின் உட்பொருளும் விளக்கப் பட்டன. வேத மந்திரங்களி லடங்கிய நுண் பொருட்களைப் பிரமாணங்களிலும் புராணங்களிலும் பெருங் கதைகளாக யாத்தனர். அக்கதைகளின் நுட்பம் உணராத வரையிலும் மந்திரங்களின் தொடர்பும் உட்பொருளும் அறிதற் கியலாவாம். எனவே வேத நூற் கல்வி எத்துணை விழுமியதும் இன்றியமை யாததுமா மென்பது தெளிந்திடுக.

இனி நீரினைக் குறிக்கும் பிற சொற்களை ஆராய்வாம். (1) "அம்ருத" தேவர் பருகிய அமுதம் தூயநீர்; கள் மது தேயிலை காப்பி முதலியன யாவருக்கும் கேடு பயப்பது. தூய நீரருந்தல் உடல் நலனளிக்கும். அமிழ்த முண்டார் சாவாது நிலை பெறுதலின் உலகத்தை நிலைபெறுத்து கின்ற வான் அமுதமாம். (2) "ஸுபக்க" தூயநன்னீர் படிவதாலும் பருகுவதாலும் உடம்பிலுள்ள (க்க) புலன்களனைத்தும் (ஸு) நன்னிலைக்கண் அமைந்து இன்பம் பயத்தற் கேதுவாதலான், நீரினை சுக மென்றனர். (3) "அ—க்ஷரம்" (ந—க்ஷரதி ந—க்ஷராயதி தத் அக்ஷரம்) "க்ஷர" to waste away அழிதல். க்ஷயம் இருமல் முதலிய நோய்களால் மெலிந்தவர்களை "க்ஷர" என்பர். க்ஷயம் முதலிய கொடு நோய்களை நீக்கும் மருந்து "அக்ஷர" மாம். க்ஷய, அக்ஷய என்பது க்ஷர, அக்ஷர என்பதோ டொக்கும். தண்ணீரின் உபயோகத்தால் எவ்வகை நோய்கள் தணிகின்றன வென்பது இச் சொல்லாராய்ச்சியால் தெரியக் கிடக்கின்றது. நாட்டு வைத்தியர்களும் ஆங்கில வைத்தியர்களும் நீரி னுபயோகத்தால் தணியும் நோய்களையும் பயனையும் ஆராய்ந்து விளக்கி யுதவுக. மக்கள் பணத்தையும் உடல் நலனையும் மருந்துருவாகிய நெருப்பில் பெய்து சிதைத்தல் வேண்டாவாம். (4) "அ-ஹி" அக்ஷர வென்பதன் பொருளைத் தழுவியது. எவற்றானும் கெடாதது, அழியாதது, அஹி அல்லது "அ-ஹீந" என்று குறிக்கப்படும் தண்ணீர். தூயநீ ரருந்தலான் உடல் வளர்ச்சியெய்து மென்பது இம் மொழியால் பெறப்படும். கேடு பயக்கும் கள் முதலிய பானங்களை யொழித்து அமுதநீரை யருந்தி அழியாமை பெறுக. (5) "அக்ஷித" மேற்குறித்த பொருள் பயப்பது.

தண்ணீரைக் குறிக்கும் இரேத சென்பது முன்காட்டினும். இப் பொருள் தரும் (6) "சுக்ரம்" என்ற சொல் வேதத்தில் வழங்கப்படுகின்றது. வீரியம் ஒளி தூய்மை என்பன இதன் பொருள். தூய நீருக்கு இந் நீர்மைக ளுண்டு. தூயநீர் பருகுவதால் வீரியம் நிலைத்துத் தூயதாகி ஒளி பொருந்தி யிருக்கும். மயக்கந்தரும பான வகைகளை யுண்பதால் வீரிய மிளகி ஒளிமழுங்கும். பிரமசரியங் காக்க விரும்புவார் தேயிலை காபி சோடா முதலிய கெட்ட பானங்களை அருந்தலாகாது. தூய குளிர்ந்த நீரால் உயிர்நிலை (குறி) யினையும் சுற்றுப் பக்கங்களையும் அலம்பி அழுக்கின்றித் தூய்மையாக வைத்திருப்பதால் வீரியம் நிலைத்து நிற்கும். அழுக்குப் படிவதால் வெம்மை மிகுந்து வீரியம் இளகிப் போகின்றது. இவ் வநுபவம் பல மாணாக்கர்களிடையே காணப்பட்டதாகும். இதனால் பிரமச்சரியம் அழிவுறுகின்றது. மருந்துகளாலும் அடையமுடியாத பயன் குளிர்ந்த நீரின் உபயோகத்தால் விளைந்திருக்கின்றது. பிரமச்சாரியங் காப்பதற்கு இத் தானங்களில் குளிர்ந்த நீர் உபயோகிப்பது மிகவும் பயனளிப்பதாகும்.

(7) "தேஜ, ஓஜ, ஸஹ"—தூயநீர் பருகுவதால் உடற்கு ஒளியும் உரனும் தாங்குமாற்றலும் எய்துகின்றன. பருகத் தகாதவற்றைப் பருகுவார், தூயநீரின் சிறந்த பண்புக்களை நுகர்ந் துணர்ந்து தீய பழக்கத்தினின் றகன்றிடுக. (8) பவித்திர—தூய்மை தருவது நீராடுவதால் உடல் தூய்மை பெறுகின்றது. பஸ்தி முறையால் உள்ளுறுப்புக்கள் தூயதாகின்றன. நசியத்தால் நாசியும் பிறவும் தூயதாகின்றன. நீரினால் புலன்களுந் தூய்மையாகின்றன. விழுமிய வியத்தகு பயனும் பெறப்படுகின்றது. இம் மொழி நீர் வைத்திய முறையையும் சுட்டு

கின்றது. நீர் மருத்துவ நூல் (Hydropathy) வேதத்தில் அறிவுறுத்தப் படுகின்றது. இதனை விரிவாக மற்றொருகால் விளக்குவாம்.

இனி, நீரினைக் குறிக்கும் இரு சொற்கள் (9) "ஹ்பேஷஜம்" மருந்து (Medicene) ஜலாஷம் நோய் (Healing) தணிப்பது. இவை வைதிக நீர் மருத்துவக் கொள்கையை உணர்த்துகின்றன. தண்ணீரில் எல்லா மருந்து நீர்மையும் நிலவலால் பேஷஜ மென்றனர். தண்ணீரில் உடல் நல வளர்ச்சி யளிக்கு (Healing power) மாற்றலிருத்தலான் ஜலாஷ மென்றனர். மருந்துக்க ளனைத்தின் பயனும் நீரொன்றுலேயே பெறக்கூடுமென வேதங் கழறுகின்றது. இவற்றான் வேத நெறியினர் மருந்துண்டு உடல் நலனையும் பொருளையும் கெடுப்பதேன்? வேதத்தில் இம்மொழி சிறந்த வேதுபற்றிப் பகர்ந்திருக் கின்றது. பொய்மை யன்று நம்பிக்கை யில்லாதார் தண்ணீரை யுபயோகித்துப் பயனுணர்ந்து தெளிந்திடுக. எளிதில் பெறப்படும் அமுதமயமான தண்ணீரைத் தள்ளி, வருந்தித்தேடும் நஞ்சுருவான மருந்துகளின் பின்சென்று வீழ்வது மிக வியப்பேயாம். வேத மந்திர அறிவுரைகள் ஒருபாற் கிடக்க, வைதிக மொழிகளின் பொருட்களை யாவது நன்குணர்ந்திருப்பின், எத்துணைப் பயனெய்தப் படும்.

(10) "ஸ்வ-தா"—தமக்குரிய தாரணு சக்தி (one's own vitality) உடலில் நிலைத்திருக்கும் தம்மாற்றல். தண்ணீரின்றி மனிதவாழ்க்கையும் நிலைக்க முடியாது. உயிர் வாழ்க்கைக்கே தண்ணீர் இன்றியமையாதது. பொருட்க ளொவ்வொன்றிலும் "ஸ்வதா" தன்வலிமை நிலவுகின்றது. தன் வலிமையின் றேல் பொருட்களின் பொருட் டன்மை யழிந்துவிடும். தண்ணீர் வளத்தால் உயிர்களுடலில் தன் வலிமை நிலைத்திருக்கின்றது.

(11) 'ஸு-க்ஷேம'—சிறந்த உடல் நலன் பயப்பது. (12) 'ஹ்தருணம்' தாங்குவதும் வளர்ப்பதும் நீர். (13) 'ஹரி' நோய்களை யகற்றுவது நீர். (14) 'சுபம்' நலந்தருவது இன்ப மளிப்பது நீர். (15) 'க்ஷத்ரம்'—(க்ஷத்ராத் த்ராயதெ) இளைப்புத் தளர்வு உழைச்சல் விரணம் முதலிய வற்றினின்று காப்பதால் 'க்ஷத்ர' தண்ணீர். (16) 'ரசம் எல்லா மருந்துக்களின் சாரமாக விளங்குவது நீர். (17) 'திருப்தி' தூய நீரருந்துவது சித்தத்திற் றெளிவும் மன மகிழ்ச்சியும் தருகின்றது. (18) 'புரீஷம்' புரி என்ற உடம்பின் விருப்பத்திற்கு அல்லது தேவைக்குரியது நீர். உடம்பில் நீர்ப்பகுதி குறைவதால் மலக்கட்டு ஏற்படுகின்றது. ஆசன சுத்தி செய்ய வேண்டுவதும் இதனால் உணர்த்தியதாகும். (19) 'திருதம்' உடலுக்கு மிகுந்த காந்தி தருவது நீர். (20) 'ஸேவநம்' உயிர்கள் பருகுதற்கு இன்றியமையாதது நீர். (21) 'சம்-வர' உயிர்களுக்கு அமைதி தருவது, அமைதி காத்து வளர்ப்பது நீர்.

இவ்வாறுகத் தண்ணீரைக் குறிக்கும் நூறு பெயர்களும் மிக வுயர்வுடையன். வியக்கத் தக்கன. இவை ஒவ்வொன்றையும் ஆராய்வதால் நீரின் நீர்மையும் நலனும் புலனும். வேதமோதுகின்ற அறிஞர் இவற்றை நன்கு ஆராய்ந்திடுக. வேதச் சொற்களி னழகு பிற எம்மொழிச் சொற்களிலுங் காணவியலாதென்பது விளக்கமாம். ஒவ்வொரு சொற்களும் தனித்த சுதந்தர உருவத்துடன் பொருட் பண்பினையும் பொருளையும் உணர்த்தி நிற்றல் காண்க. ஒவ்வொரு சொல்லும் வெற்றுரை யன்று; சொற் பொருளியல்பு தெரிப்பது. நிற்க, சொற்களின் நட்ப முணர்ந்த பின்னர், வேத மந்திரங் களிலும் நீர்ப் பண்பு குறிப்பன சில தருவாம்.

> ஆபோ அஸ்மாந் மாதர: சுந்த்யுவந்து
> ஹக்ருதேந நோ ஹக்ருதப்வ: புநந்து
> விச்வம் ஹி ரிப்ரம் ப்ரவஹந்தி தேவி:
> உதிதாப்ய: சுசிராபூத ஏமி.

எசுர். 4-2.

"நலந்தரும் நீர் நம்மைத் தூய்மைப் படுத்துக. ஒளி வளர்க்கும் நீர் நமக்கு ஒளியால் தூய்மை தருக. உயர்வுடை நீர் உடலினின்று ஊத்தைகளைப் போக்குக. இந் நன்னீரால் அகப்புறத் தூய்மை பெற்று நாம் மே நிலை யெய்துவோமாக."

> அப் ஸ்வந்தரம்ருத மப்ஸு ஹ்பேஷஜம்
> அபாமுத ப்ரசஸ்தயே தேவா
> ஹபவத வாஜிந:

இருக்கு, 1-23-19.

"நீரினகத்து அமுதம் நிலவுகின்றது. நீரினகத்து மருந்து உறைகின்றது. அறிஞ! நீரினைப் புகழ்தற்கு அக மகிழ்வு கொள்க." இச் செய்யுட்களால் நீர்வடிவான மருந்தின் பெருமை எத்துணையென மறை யுணர்த்த லுணர்க. அறிஞர் கிரிபித் தமது மொழி

1,00,000 குடும்பங்களை சீர்படுத்திய நூல் எது?

இல்வாழ்க்கையின்

இரகசியங்கள்.

என்ற நூல்தான். ஆனால் இதைப் போலவே சிறிது பெயர் மாற்றத்துடன் அநேக போலிப் புஸ்தகங்கள் கிளம்பி யிருக்கின்றனவே? உண்மையான புஸ்தகம் எது என்று எப்படித் தெரிந்து வாங்ுவது? நேயர்களே! புஸ்தகத்தில் "ஏரோப்ளேன்" (ஆகாயக் கப்பல்) டிரேட் மார்க்கு போட்டிருக்கும். இதுதான் உண்மையான ஆதிநூல். இந்த டிரேட் மார்க் உள்ள புஸ்தகம் எல்லா ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். விலை ரூ. 2-0-0

ஒரே காலத்தில் இரண்டு புஸ்தகங்கள் தருவித்தால் தபால் செலவில்லை.

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.

"ஆனந்தவிகடன்."

இதற்கு இப்பொழுது நான்காம் ஆண்டு நடக்கிறது.

64 பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளிவரும் உயர்ந்த பத்திரிகை. இதில் பலமேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனின் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768 பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா?

தபால்கூலி யுள்பட இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு வருஷ சந்தா ரூ. 1-0-0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1-4-0

மாதிரிகாபி இனும்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி மதராஸ்.

தந்தி விலாசம் "விகடன்" டேலிபோன் 3311

ரூ. 2-14-0 ரூ. 2-14-0

நூதன கைத் தையல் மெஷின்.



சிலகாலம் வரையில் மட்டும் மேற்கண்ட எமது அசல் விலைக்குக் கொடுக்கிறோம்.

இம் மெஷின் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள் மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாகெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0

திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கானடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

1,000 இரகசிய முறைகள் கொண்ட அருமையான நூல் வெளிவந்துவிட்டது!

கைத் தொழில் முறைகள்.

இதில் மாதம் 100 ரூ. முதல் 500 ரூ. வரை சம்பாதிக்கத்தக்க அநேக தொழில் முறைகள் தெளிவாகக் கூறப்பட் டிருக்கின்றன. சோப்புகள், பெப்பர்மிண்டுகள், தீக் குச்சிகள், பலவித மருந்துகள், மெழுகு வர்த்தி வர்ண தினுசுகள், வார்னிஷ், கூந்தல் தைலங்கள் இப்படி 1000 முறைகள் உண்டு. விலை ரூ. 1-8-0

வாசன் புஸ்தக சாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

எமது விசேஷ குறைந்தவிலை விற்பனை.
22 காரட் ரோல்டு கோல்டு கைக் கடியாரங்கள்.



இதில் எம் மாதிரி வேண்டுமானாலும் அனுப்பப்படும். கடியாரம் உறுதியாயும் நெடுநாள் உழைக்கக்கூடியதாயுமிருக்கும். ஒவ்வொன்றும் ரோல்டு கோல்டு அமரிக்கன் கை சங்கலியுடன் அனுப்பப்படும். சிலகாலம் வரையில் 1-க்கு விலை ரூ. 4-15-0 ஜி[illegible] வாட்ச் கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

புத்துயிர்

நரம்புத்தளர்ச்சி தேக மெலிவு பலமின்மை வீரியக் குறைவு இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றே ஒரு புட்டி

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்)

வாங்கி உபயோகியுங்கள். தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளையும் அறவே நீக்கி, போன பலத்தை மீட்டி புதிய ஊக்கம் காட்டி உங்களை உண்மையில் ஒரு புதிய மனிதனாக்கி விடும். இந்த அரிய ஔஷதம் கண்டு பிடிக்கப்பட்டு 30 வருஷங்களாக நல்ல பெயருடன் உலகில் நிலவி வருவதே இதற்குப் பெரியதொரு அத்தாட்சி.

விலை ரூ. **3—4—0.**

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

தபால் பெட்டி 287,

சென்னை.

போன்று 'அஸ்மின், அமுஷ்மின்' என்பன எதிரிலிருப் பவற்றையே சுட்டுகின்றன. இக் கோள் நாள் விண்மீன் மண்டலமாகிய சுவர்க்கத்தில் முற்கூறிய கதையின் வியப்புத் தெள்ளிதிற் றெண்படும்.

சுவர்க்கத்தில் சூரிய சந்திராதி தேவர்களைக் கண்கூடாகக் காண்கின்றோம். அன்னார் வரவும் போக்குங் கண்கூடே. சில காலத்து ஒருவரை யொருவர் அணுகியும் விலகியுஞ் செல்கின்றனர். அவர்கள் உரையாடுவதை நாம் கேட்பதில்லை. அவர்களது சுழற்சி முதலிய செயல்களைப் பார்க்கின்றோம். புராணக் கதையின் நுட்பம் உணர்வார்க்குச் சுவர்க்கத் தலம் கற்பனை யென்பது புலனும். வான மண்டலமாகிய சுவர்க்கத்தில் அப்சரக் கூட்டம் எவை? தேவசபையில் அப்சரசுக்களாக நடிப்பவர் யாவர்? இவ்வினாக்கட்கு விடை "அப்-ஸர:" என்ற மொழியே பகர்கின்றது. வேத மொழியில் ஒவ்வொரு சொற்களும் தம் பொருளை இனிது விளக்கி நிற்கும். வேத உபதேசங்களின் உட்பொருள் எம் முறைபற்றி அமைந்திருக்கின்றன வென்றறிவுறுத்தற்கு இஃதொரு வாய்ப்பாகும்.

"ஆப்" என்ற நீரின் ஆதாரவினால் "ஸரண" உலாவித் திரிவது "அப்-ஸர" எனப்படும். "அப்ஸு ஸரந்தி இதி அப்ஸரஸ:" (அமர கோசம்-க்ஷீரசுவாமி உரை. 1-1-11) அப்சரசாகும். மழைக் காலம் வானமண்டலத்தில் மேகங்கள் சுற்றித் திரிகின்றன. அச்சந்தரும் பேரிடிகள் முழங்கு கின்றன. மின்னல் மின்னி மின்னி நடிக்கின்றது. மழை பொழிகின்றது. மின்னல் புயலின் ஆதாரவில் நின்றாடு கின்றது. மின்னலுக்கும் நீருக்கும் இத்தொடர்புண்டு. நீரினாதரவில் மின்சாரம் சுழன்று திரிவது "அப்-சர"த் தன்மை யாகும். தூயநீர் மின்சாரம் இயங்குதற் குரியதன்று. சாதாரணத் தண்ணீர் மின்சார வியக்கத்திற்கு (Good conductor) ஏற்புடைத்தாகும். இதற்குச் சிறிதும் ஐயமில்லை. இக்கருத்துக்கள் "அப்-சர" வென்ற சொல்லினின்று தாமே பெறப் படுகின்றன.

அப்சரசுக்களின் நடனம் இந்திரசபையில் நிகழ்வதை மழைக்காலத்து அடிக்கடி பார்க்கலாம். அப்சரசுக்கள் ஆடும் பொழுது மித்திரன் வருணன் என்ற நீர்த்தேவர் பானின்று இரேதசு அல்லது தண்ணீர் பெருக்கெடுத்து மழைபொழிகின்றது. இவ் வுருவகம் ஈண்டு நன்கு துலங்கிற்று. இன்னும் அப்சரசைக் குறித்த பிற பொருளையும் சிறிது காண்பாம்.

(1) ஹ்ருக்ருதாசி—(ஹ்ருக்ருத்) தண்ணீரின் அஞ்சனம் அல்லது ஒழுக்கம். நீரொழுக்கம் இது ஒரு அப்சரசின் பெயர். நீரொழுக்கு மின்சாரத்திற்கு நனி வேண்டப்படுவது.

(2) ஊர்வசி—(உரு வசே யஸ்யா:) யாவற்றையுந் தன்னகத் தடக்கி நிலவுகின்ற மின்சாரத்திற்கு ஊர்வசி யென்று பெயர். மின்சாரத்தில் உலகின் பல பொருட்களும் வயப்பட்டிருப்பது வெளிப்படை. இதற்குப் பிறிதொரு பொருள். 'உரு பஹு அச்நுதே' மிகுதியாக உண்பது என்பதாம். மின் வீழ்ச்சியால் ஏற்படும் அழிவு எத்தகைய தென்பது கண்கூடு மின்சாரம் யாவற்றையும் உண்பது எவ்வகைத்து? மின்சாரம் 'யாண்டும் பரவி நிற்ப'தென்பது இச் செயலால் கொள்ளக் கிடக்கின்றது.

'புரூரவனும் ஊர்வசியும்' என்ற தொடர்பு நாடகத்திலும் புராணத்திலுங் கூறியிருப்பதை யாவரு முணர்வர். 'புரு-ரவா' வென்பது 'பெரு முழக்கஞ் செய்பவன்.' இது மேகங்களின் கடகடவென்ற இடிமுழக்கினைக் குறிக்கின்றது. எனவே 'புரு-ரவா' என்பது மேகத்தின பெயர். ஊர்வசி யென்பது மின்சாரத்தின் பெயர்.

புரு-ரவா பஹுதா ரோரூச்யதே.

நிருக்தம். 5-4-46.

"பலவகையாகப் பெரு முழக்கஞ் செய்வதைப் புரூரவா என்பர்.' புயலுக்கும் மின்னலுக்கு முள்ள தொடர்பை இஃது உணர்த்துகின்றது. இவ்வகையாக அப்சரசுக்கள் மின்னலாவதும், மின்னல் மேகத்தோடும் நீர் வீழ்ச்சியோடுந் தொடர் புற்றிருப்பதும் மேற்குறித்த உருவகம் நன்கு தெரிப்பது தாமே விளக்கமாம். மின் ஒளி வீசும் பொழுது மேகங்கள் மழை பொழிகின்றன வென்பது மேற்கதையால் பெறப் படுகின்றது. நிற்க, இத்துணை புகன்றும் மித்திரன் வருணன் உருவம் ஈண்டு தெளிவுபடவில்லை. யாதெனின் மித்திரனும் வருணனும் மேகத்தி லுறைகின்றன ரென யாண்டும் கூறப்படவில்லை. எனவே

மித்திர வருணன் வடிவம் சிறிது சிறந்திருத்தல் கூடும். அவ் வடிவினைக் கீழ்வரும் செய்யுளிற் காண்க.

மித்ரம் ஹுவே பூத தக்ஷம்
வருணம் ச ரிசாதசம்
த்தியம் க்ருதாசீம் ஸாதந்தா.

இருக்கு. 1-2-7.

இச்செய்யுள் வாயு சூக்தத்தில் மித்திரா வருண தேவதையைக் குறிப்பது. இது மூன்று பகுதியுடையது. இதன் பொருள்:—

(1) பூத-தக்ஷம் மித்ரம் ஹுவே—வலிமை மிக்க மித்திர வாயுவை யான் ஏற்கின்றேன்.

(2) ரிசா அதஸம் ச வருணம் ஹுவே—துரு (Rust) வேற்றுகின்ற வருண வாயுவை யான் ஏற்கின்றேன்.

(3) க்ருதா அசீம் த்தியம் ஸாதந்தா—இவ் விரண்டும் தண்ணீரைத் தோற்றுவிக்குஞ் செயல் நிகழ்த்துகின்றன.

இச்செய்யுட் பொருளொடு மேற் கதையை ஒப்பிட்டுக் காணின் தண்ணீரின் பிறப்பியல்பு புலனும்.

'வருண'ச் சொற்கு அடைமொழியாக 'ரிச்-அதஸ்' என மந்திரத்தில் காணப்பட்டது. 'ரிச்-அதஸ்' என்பது பிறவுருவை அழிப்பது. 'ரிச், ரிஷ், ருச், ருஷ்' இப் பகுதிப் பொருள் 'உருத்திரிப்பது, துயர் தருவ' தென்பதாம். அது 'ரிஷ்ட, ருஷ்ட (Rust) எனவாயிற்று. ஆங்கிலத்தில் Rust என்பதும் இப்பகுதி யடியாகத் தோன்றியிருத்தல் கூடும். அகராதிகளில் 'ருதிர' என்பதோடு அச் சொல் இணைக்கப் பட்டிருக்கின்றது. அவ்வாறு வலிந்து பொருள் கொள்ளத் தேவை யில்லை. "ருஷ்" பகுதியினின்று இயல்பே "ருஷ்ட" (Rust) தோன்றுகின்றது. பிராண (Oxygen gas) வாயுவி னியல்பு திருப்பிடிப்பதாகும். இரும்பு முதலியவற்றில் இக் காற்றினாலேயே துரு ஏற்படுகின்றது. மூலப் பொருளி னுருவைக் குலைப்பது இதனியல்பாதலான், "ரிச-அதஸ்" என்ற அடைமொழி கொடுக்கப் பட்டிருக் கின்றது. எனவே வருணவாயு வென்பது பிராண வாயு (Oxygen) வின் பரியாயம். "வருண" என்பது தேர்தல், பொறுக்குத லென்பதாம். பிராணவாயுவை எல்லா உயிர்களும் தம் வாழ்விற்காகத் தேர்ந்தெடுக்கின்றது. இஃதின்றி உயிர்கள் உயிர்வாழ வியலாது. எனவே இது பிராணவாயு வென்று பகரப்படுகின்றது.

வருண வாயுவை இவ் வகையாக உணர்ந்து கொண்டதினின்றே மித்திரவாயுவும் இனைத்தெனப்புலனும். மித்திரன் என்பது நீரின் மூலப் பொருளாகிய (Hydrogen) காற்று. "மி-த்ர" என்பது "மா-மாநே" பகுதியால் தோன்றி "அளவிடுத" லென்ற பொருள் தரும். ஆங்கிலத்தில் Meter, Metre என்பது "மித்ர" வின் வேறுபாடாகும். "மா" பகுதியினின்று "மித்ர" தோன்றி Meter, Metre என்று திரிந்தது. இதனை:—

(1) த்தர்மா—மீட்டர் Thermo-meter } ஹ்கர்ம-மித்ர; வெப்ப மளக்குங்கருவி.

(2) ப்யாரோ-மீடர் Baro-meter } பார-மித்ர; சுமை யளக்குங் கருவி.

(3) ஜ்யாம்-மீடர் Geo-meter } கோ-மித்ரா; நில அளவை.

(4) ஹைட்ரோ-மீடர் Hydro-meter } ஸார்த்ர- மித்ர; நீரளக்குங் கருவி.

(5) பாய்ரோ மீடர் Pyro-meter } பர்ஹிர்-மித்ர; நெருப்பளக்குங் கருவி.

(6) லாக்டோ-மீடர் Lacto-meter } ரஸ-மித்ர; பாலளக்குங் கருவி.

(7) ஜ்யா-மெட்ரி Geo-metry } கோ-மித்ர; நில அளவை நூல்.

இச் சொல் வழக்கால் 'மித்ர' என்பதோடு Meter ஒத்திருத்தல் காண்க. பா அடியினையும் Metre எனப்படும். ஆண்டும் இதன் பொருள் 'எண்ணிட்ட, அளவிட்ட எழுத்துக்க' ளென்பதாம். மாத்ரா, மித்ர, மீடர், metre என்பன ஒரு பொருட் கிளவிகள். எனவே, மித்ர வென்பது அளத்தல், நிறுத்தல், எண்ணல் என்ற அளவைப் பொருளை யாண்டும் உணர்த்துகின்றது.

'பூத தக்ஷ மித்ர 'வென்பது பிற பொருட்களை நிறுத்தல் அல்லது முகத்தலால் காட்டும் வலிமையுடைக் காற்று. ஹைட்ரோசனால் யாவும் அளவிடப்படுகின்றது. நீரின் நடுவண் மித்திரவாயு ஹைட்ரோசன் உறைகின்றது. "தக்ஷ" என்பது to increase உருவில் பெருகுதல். இந் நீர்மை ஹைட்ரோசனுக் குரியது. "பூத" என்பது pure தூய்மை. தூய ஹைட்ரசன் காற்று யாவற்றையும் அளவிடுவது, இதுவும் பிராண

மஹாலக்ஷ்மி கவசம்

முற்றும் கற்றுணர்ந்த மஹான் ஒருவரால் வேதாகம சாஸ்திரமுறை பிறழாது செய்யப்பட்டது. உண்மையான பலனை அளிக்கத் தக்கது—வாழ்வில் கஷ்டம் நீங்கி, கவலை நீங்கி, துன்பம் நீங்கி, துயரம் நீங்கி சௌக்ய சம்பன்னராய் வஜ்ரதேகத்துடனும் வசீகர முகத்துடனும் வற்றாத தேஜஸுடனும் வாழ இதைவிட அரிய சாதனம் வேறில்லை யென்றே சொல்ல வேண்டும். ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர் மறுமுறை ஒரு டஜனுக்கு நண்பர்களுக்கு சிபார்சு செய்கிறார் என்றால் இதன் உண்மையைப்பற்றி இன்னும் எழுத வேண்டுமா?

பல்லாயிரக் கணக்கான கவசங்கள் இதுவரை விற்கப்பட்டு விட்டன. நீங்களும் ஒன்று இன்றே வாங்குங்கள்.

தங்கக் கவசம் ரூ. 7—0—.

வெள்ளிக் கவசம் ரூ. 2—0—0.

மஹாலக்ஷ்மி கம்பெனி,

தபால் பெட்டி 280, :: மதராஸ்.

A. S.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

ஏ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 3

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாய்பு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்.

இரும்பு - - - - பெட்டிகள்

விலையில் குறைவும், உழைப்பில் சிறப்புமுள்ள இரும்புப் பெட்டிகளுக்கு, பிற இடங்களுக்குப் போகுமுன் எங்களை வந்து பாருங்கள். நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதிகம் மதிப்பிடக் கூடிய பெட்டிகள், எங்களிடம் கிடைக்கும்.

V. Doraisamy Mudaliar

58, Broadway, MADRAS.



ஓம்.

வேதத்தில் நீர்-நூல்.

வேதமாணுக்கன்.—த. ராமகிருஷ்ண விச்வகர்மன்.

(உரிமை ஆக்கியோர்க் குரியது.)

வேதத்தில் பலவகைக் கலைகளின் தோற்றுவாய்களும் காணப்படுகின்றன. வேதங்களை வேத நான்மரபே கற்கவும் கற்பிக்கவும் படுமாயின், வேதத்தின் நுண் கலைகள் பலவும் பரவிப் பெருக்க மடையும். வேதத்தின் சொற்றொடரமைப்பு மிக எளிது. சொற்களின் உட்கருத்தும் பொருள் நுட்பமுமுணர்தல் மிக அரிது. பல அறிஞர் சிலவாண்டுகள் நடுநிலை திறம்பாது இப்பொருட்களை ஆராய்தற்கு முயலுதல் வேண்டும். இஞ்ஞான்று சிலவிடங்களில் வேதக் கலைகளை ஆராய்தற்குச் சிலர் முனைந்திருக்கின்றன ரென்பதிற்றடையில்லை. ஆனால் பழங்கொள்கையினர் தந்துணிபையே வேதத்துட் புகுத்த முனைவர். இத்தகையர் வேதத்தின் உண்மைப் பொருள் காண்டற் குரியரல்லர்.

வேதத்தின் அகச்சான்றுகளாலேயே வேதப் பொருளை இயல்பே காண்டல் இன்றியமையாததாகும். அகச் சான்றுகளை ஆய்ந்து காணின், புறச் சான்றுகளின் பொருத்தமும் பொருந்தாமையும் தெள்ளிதிற் புலனாம்.

இந்நாள் அகச்சான்றுகளால் பொருள் காண்பதிலும் பிழைகள் நிகழ்கின்றன. அகச் சான்றுகளை ஆராய்ந்து பிழையற நிறுவுதற் கியன்றவாறு நான் மறைகளும் எவ்வகையில் அமைந்திருக்க வேண்டு மென்பதும், வேதச் சொற்கள் அனைத்தின் அறிவும் எங்ஙனம் பெறுதல் வேண்டு மென்பதும், இஞ்ஞான்று எவரு முணர்ந்திலர். எனவே சான்றுகள் காண்பதிலுந் தவறுத லியல்பு. எலிகளுக் கஞ்சி எவரும் வீடுகள் கட்டுவதை நிறுத்தா திருப்பது போன்று, பிழைகளுக் கஞ்சி எவரும் வேத நுண்பொரு ளாராய்ச்சியை யகற்றுதல் வேண்டாம். எவர் எழுத்திலும் பிழைகள் உளவாயின், ஆராய்ச்சித் திறன் மிக்க அறிஞர் அவற்றைத் திருத்திடுக. தக்க சான்றுகளொடு பலரும் ஆராய்வதாலேயே மறைநூற் கலைகள் திரும்பவும் கிளர்ந்தெழுதல் வேண்டும். அன்றிப் பிற நெறி யெதுவுமில்லை.

இக்கட்டுரையில் வேதத்தின் நீர்-நூற் பகுதிகளைச் சிறிது தொகுத்துக் காட்ட முயல்கின்றேன். மருத்துவ நூலறிஞர் இப் பொருள் குறித்து ஆராய்ந்தால் வேதத்தின் விருப்பமும் உயர்வும் தெற்றெனப் பிறங்கும்.

வேதமொழியில் தண்ணீரை "ஜல" மென்பர். தண்ணீருக்கு நூறு பெயர்களுண்டு. அவற்றை வேதநிகண்டு முதலத்தியாயம் பனிரண்டாம் கண்டத்திற் காண்க. அப் பெயர்களுள் "ஜன்ம" மென்ப தொன்று. பிறப்பவற்றையே "ஜன்ம" மென்பர். இம் மறைக் கிளவியான் தண்ணீர் பிறப்பது அல்லது ஆக்கப்படுவது என்பதாயிற்று. பிறத்தல் பிறரால் ஆக்குதல் அல்லது தோற்றுவித்தலென்க. படைப்பில் எல்லாப் பொருட்களும் ஆக்கப் பட்டவைகளே. தண்ணீரைத் தனியாக "ஜன்ம" எனக் குறிப்பதேன்? யாதேனுஞ் சிறப்பிருத்தல் வேண்டும். நீரின் தோற்றத்தில் சிறிது வேறுபாடு காணப்படுகின்றது. தற்கால நுண்பொருள் நூலார் இருவகை வாயுக்களால் தண்ணீ ராக்கப் பட்டதென்பர். இக்கருத்தானும் "ஜன்ம"ப் பெயர் பொருளுடையதேயாம். நிற்கப் பிற சொற்களையுஞ் சிறிது ஆராய்வாம்.

"பூதம், புவனம், பவிஷ்யத்" இம் முச் சொற்களும் வேதத்தில் நீர்ப் பொருள் குறிப்பன. இவை "பூ" பகுதி யடியாகத் தோன்றியவை. "பூ" என்பது ஆக்க, நிலைக்க, பிறக்க, தோற்றுவிக்க எனப் பொருள்படும். எனவே, இம் மொழிகளின் பொருள் "ஆக்கப்பட்டது, ஆக்கப்படுகின்றது, ஆக்கப்படுவது" என்பதாம். தண்ணீர் முற்காலத்து ஆக்கப்பட்டிருந்தவாறே இக்காலத்து ஆக்கப்படுகின்றது. வருங்காலத்தும் ஆக்கப்படு மென்று கொள்ளக் கிடக்கின்றன. இச் சொற்கள் நீரின் தோற்றம் எக்காலத்தும் ஒரே தன்மைத்தென விளக்குகின்றன.

இப் பெயர்களுள் "ரேத:" சிறப்பாக ஆராய்தற்குரியது. மறைகளில் "ரேத:" என்பது

தண்ணீர். நடைமொழியில் புருட வீரிய மென்பர். வேதத்தில் நீர்ப் பொருள் குறித்தே யாண்டும் வழங்கப் படுகின்றது. இச்சொற் பொருள் நுண்ணிதி ஞராயின் "பிராமண" நூற்களில் கழறும் மித்திரா வருணன்கதை இனிது புலனும். இதற்குக் கீழ்வருவனவும் இயைபுடையன.

மித்ரா வருணௌ த்வா வ்ருஷ்டியா அத்ரதாம்.

எசுர், 2-26; சதபதம். 1-8-3-12. 'மித்திரனும் வருணனும் மழை பொழிந்து நம்மைக் காக்க." தண்ணீர் தோன்றுவது மித்திரன் வருணன் செயலென்று இத் தொடர் உணர்த்துகின்றது. மித்திரனும் வருணனுஞ் சேர்ந்து தண்ணீரைத் தோற்றுவித்து மழையாகப் பொழிகின்றனர். தண்ணீர் மித்திரன் வருணன் கலப்பால் உண்டாவது. இதில் ஆண்பெண் சேர்க்கை யில்லை. இருவரும் ஆண்; இருவருங் கலந்து நீர் தோன்று கின்றது. இக்கருத்து அதர்வ வேதத்துங் காணப்படுகின்றது.

மித்ரா வருணௌ வ்ருஷ்டியாதிபதி
தௌ மாவதாம்.

அதர்வம். 5-24-5. "மித்திரனும் வருணனும் மழைக் கதிபர். அவ்விருவரும் எம்மைக் காக்க." இதிலும் மித்திரன் வருணன் சேர்க்கை மழை அல்லது தண்ணீர் என்று அறிவுறுத்தப் படுகின்றது. இத் தொடர்களை உட்கொண்டு மைத்திரா வருணன் கதையை ஆராய்வாம்.

மித்திரா வருணன் கதை:—தேவராசன் இந்திரன் கொலுவில் தேவர்க ளெல்லாம் அமர்ந்திருந்தனர். தர்பார் நடவடிக்கைகள் முடிந்த பின்னர், தேவதாசிகளின் ஆடலும் பாடலும் துவங்கின. ஊர்வசி நடிக்கும் பொழுது அதனைப் பார்த்திருந்த மித்திரனும் வருணனும் காமுற்றனர். அவர்கள் இரேதசு கலிதமாயிற்று.

மித்ரா வருணயோ ரேதச்சகத.

மித்திர வருணனுக்கு ஒரு தடவை இரேதசு இளகியது. இரேதசைத் தண்ணீரென்றும், மித்திரனையும் வருணனையும் இருவகைக் காற்றுக்க ளென்றுங் கொண்டால் மேற்குறித்த கதையின் உட்பொருள் வெளியாவதோடு உருவகக் கதை யென்பதும் விளக்கமாம்.

இதிகாச முறையில் நிகழ்ந்த தெனக் கொண்டால் குறைகள் பலவுள. (1) சுவர்க்கத்திற்குப் புண்ணியஞ் செய்த நன்மக்கள் செல்கின்றனர். ஆங்கு தேவதாசிகள் தேவை எற்றுக்கு? (2) சுவர்க்கத்திலும் வேசையர் வதிகின்றன ரெனினும் மித்திரனும் வருணனும் (புண்யக்ருதௌ ராஜாநௌ. நிருக்தம்) புண்ணியம் புரிந்து அரசரானவர். நல்லொழுக்கம் நிரம்பிய மன்னர் குழுமிய பேரவையில் இருவருக்கும் ஒரேகால் வீரியம் இளகிற்றென்பது இயலாத தொன்று. மெய்யெனக் கொள்ளினும் மறைவான செய்தியை உலகனைத்திற்கும் வெளிப்படுத்தியதேன்? எனவே நிகழ்ந்த மெய்க் கதையல்ல வென்பதும் ஒருண்மையை மறைமுகமாக உருவகப்படுத்தியிருக்கின்ற தென்பதும் தெளிவாம்.

இரேதசு வேத மொழியில் தண்ணீரின் பெயரென்பது முன்னர் நிகண்டின் வாயிலாகக் காட்டினும். இக் கதையில் இப்பொருள் காணப் பெறின் மறைமுகப்படுத்திய உட் பொருள் வெளிப்படும். மித்திரன் வருணனென்னும் இரு காற்றுக்களால் தண்ணீர் உண்டாகின்றது. மித்திரன் வருணனிட' மிருந்து இரேதசு வெளிப்பட்டது. அல்லது இவ்விரு வாயுக்களின் கலப்பால் தண்ணீர் தோன்றிய தென்பதே உட்பொருளாம்.

இந்திரன் கொலு யாதென்று பெரிதும் சிந்திக்க வேண்டுவதில்லை. நாடோறும் இரவில் வான மண்டலத்து சுவர்க்க லோகத்தைக் காண்கின்றோம். சந்திரன் வியாழன் சுக்கிரன் சனி முதலிய கோட்களும் நாட்களும் விண்மீன்களும் ஒளி செய்து பிறங்குகின்ற வான மண்டலம் இந்திரன் அரசவை. நெடிது நோக்காடியால் இவற்றைப் பகலிலும் பார்க்கலாம். இவ் வானமண்டலமே சுவர்க்கம். இந்நிலவுலகினை 'இகலோகம், ஐகிகம், மிருத்யு லோக' மென்பர். மேலே காண்கின்ற ஒளி பொருந்திய வானமண்டலத்தை 'ஆமுஷ்மிகம், சுவர்க்க லோக' மென்பர். "உபநிடதங்களில் அஸ்மின் லோகே, அமுஷ்மின் லோகே," இவ்வுலகிலும் அவ்வுலகிலுமென வழங்கப்பட்டிருக்கின்றது. இப் பூவுலகம் மக்களுக்கு நேர்முகமாகத் தென்படுவது போன்றே சுவர்க்கமும் மேலே நேர்முகமாகப் புலப் படுவதேயாம். அன்றி 'அமுஷ்மின் லோகே' என்பதற்கு வேறெப் பொருளு மில்லை. 'இந்த, அந்த' என்பன எதிரிலிருப்பவற்றைச் சுட்டுவது

அவ்வளவும் தித்திப்பே!

நமது சொந்த பிரசுரங்களில் பொறுக்கி யெடுத்த சிலவற்றை இதன் கீழ் குறிப்பிட்டுள்ளோம். ஒவ்வொரு புஸ்தகமும் ஒன்றைவிட ஒன்று ஆச்சர்யமாகவும், மனதைக் கவரும் அபூர்வ விஷயங்களடங்கியதாயு மிருக்கின்றது—இவைகளில் நீங்கள் வாங்கும் ஒரே புஸ்தகம் மற்ற யாவற்றையும் வாங்கத் தூண்டு மென்பதில் ஐயமில்லை.

	ரூ. அ.
இந்திய மாதா	... 1—8
இந்திய பிதா	... 2—0
துரதிர்ஷ்ட இந்தியா	... 2—8
பச்சை மோதிரத்தின் மர்மம்	... 1—0
காசி அல்லது புண்ணியபூமி	... 1—4
வர்த்தக யுக்தி	... 0--12



ஒரே தடவையில் மேல் கண்ட எல்லா புஸ்தகங்களுக்கும்
ஆர்டர் செய்பவர்களுக்கு எங்களின்

சிறு கதை செட் இனாம்!!!

முத்தையா புக் டிபோ,
தபால் பெட்டி நெ. 99,
சென்னை.

குழந்தைகளை நேசியுங்கள்.

அழுகிற குழந்தைகளை அடிக்க வேண்டாம். உங்கள் அருமைக் குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த

நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரமிக்கச் செய்யும். இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கி யிருக்கின்றன. அவை முற்றிலும் பித்தளையினுல் செய்யப் பட்டு, மிகுந்த அழகோ டிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும் மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை.

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0.
நெ. 2 செட் ,, ரூ. 3—4—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் :: :: காசி.

கர். மகாத்மா காந்திக்கு கஸ்தூரிபாய் தேவி மனைவியாக வாய்த்திருப்பதுபோல், டால்ஸ்டாய்க்கும் ஒரு உத்தம மாதரசி இல்லக் கிழத்தியாக வாய்த்திருந்தால் டால்ஸ்டாயின் சரிதம் வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும். இல்லற வாழ்க்கையில் டால்ஸ்டாய் துர்பாக்கியசாலி என்று தான் சொல்லவேண்டும். எனவே 50-வது வயதுக்கு மேல் அவர் இல்லறம் துறந்து தனிவாழ்க்கை நடத்தும்படி நேரிட்டது. இந்த இல்லறப் பிளவால் அவர் பட்ட துன்பங்கள் அநந்தம். எனினும் வீரரான டால்ஸ்டாய் தன் லக்ஷ்யத்தைக் கை நெகிழ விடவில்லை.

•

அவரது வாழ்க்கையை நுட்பமாய் ஆராய்ந்து பார்த்தால், ஒரு உத்தமத் தலைவருக்குத் தேவையான அநேக குணங்கள் அவரிடம் இல்லாதிருந்தன வென்பது புலப்படாதொழியாது. அவர் நினைத்திருந்தால் உலக முழுதும் அவர் பிரயாணம் செய்திருக்கலாம். ஆனால் அவர் ருஷியாவைவிட்டு வெளிக் கிளம்பவே இல்லை. ருஷியா தேசம் முழுதுங் கூட அவர் சஞ்சாரம் செய்தது கிடையாது. மன விகாசத்துக்கு, பிரயாணம் இன்றியமையாததானால் அவரது மனம் பூரண விகாசம் பெறவில்லை யென்றே சொல்லவேண்டும். அவரது கிணற்றுத்தவளை வாழ்வின் பலனை அவரது நூல்களில் பாக்கக் காணலாம். ருஷியா—விசேஷமாக, அவர் வாழ்ந்திருந்த யாஸ்னயா போலியானு கிராமமே அவரது உலகமாயிருந்தது. லோகத்தின் நடு நாயகமாய் விளங்குவதற்குத் தேவையான அம்சங்களை அவரது குக்கிராமம் பெற்றிருக்கவுமில்லை. மனிதனது அறியாமையைப் போக்கி, அநுபவத்தை விருத்தி செய்து, குணவிகாரங்களைச் சீர்திருத்தி அவனை உத்தமனுக்குவதற்குப் பிரயாணம் பெரிதும் உதவி செய்யத்தக்கது. பிடிவாதம், குருட்டு நம்பிக்கை, கொண்டதே கோலம் கண்டதே காட்சி என்ற அற்ப மனநிலை முதலியன ஒழிவதற்குப் பிரயாணமே உத்தம சாதனம். பிரயாணம் செய்யாத மனிதன் புடம் போடாத பொன்னுக்கு ஒப்பாவான். "நூருக் கேட்கினும் நூலறி வென்செய்யும்" என்றபடி நூற்றுக் கணக்கான நூல்களைப் படிப்பதாலும் ஒருவனுக்குப் பிரயாண பலம் லபிக்காது—மனம் விகாஸம் பெருது. எனவே டால்ஸ்டாய் லோகசஞ்சாரம் செய்யாதது அவரது வாழ்வுக்கு ஒரு பெருங் குறையாகவே முடிந்தது. தாவர நூல், உளநூல், உயிர் நூல் முதலியனவும் அவர் கற்றுக் கொள்ளவில்லை. எனினும் அவரது சதாப்த ஜயந்தி உலக முழுதும் கொண்டாடப்படக் காரணம் என்ன? உலக மக்களின் உள்ளத்தைக் கவருமாறு அவரிடம் அமைந்திருந்த குணங்கள் எவை? அவர் ஒரு அவதார புருஷராக மதிக்கப்படக் காரணமென்ன? டால்ஸ்டாய் உலக மதிப்புப் பெற்றதற்குள்ள காரணங்கள் கீழ்வருவனவாகும்.

1. டால்ஸ்டாய் ருஷிய பாஷையில் மிகவும் தேர்ச்சிபெற்ற ஒரு எழுத்தாளர். ஒரு உத்தம சாகித்திய நாதனுக்கு வேண்டிய சிறப்புகளெல்லாம் அவரிடம் பூரணமாய் அமைந்திருந்தன. அவரது நூல்கள் ஐரோப்பிய பாஷைகளி லெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டு லக்ஷக் கணக்காகச் செலவாகி வருவதே அவரது நூல்களின் உயர்ச்சிக்குப் போதிய சாட்சியமாகும். உலக மெல்லாம் அவரது கொள்கைகளை எளிதி லுணர்ந்து கொள்ளுமாறு அவர் தம் நூல்களுக்கு "காபிரைட்" உரிமை வைத்துக் கொள்ளவில்லை. "யுத்தமும் சமாதானமும்" என்ற அவரது நூல் எந்த பாஷைக்கும் பேரழகு செய்யும் ஒரு திவ்விய கிரந்தமாகும். "யுத்தம் ஒழிய வேண்டும்" என்ற கொள்கையைப் பிரசாரப் படுத்தும் பொருட்டே அவர் இந்நூலை யெழுதி வெளியிட்டார். அவரது சிறுகதைகளில் அன்னுகரீனு என்னும் கதை விலை மதிக்கமுடியா மாணிக்க மாகும். ஷேக்ஸ்பீயரின் காம்பீரியமும் ஒரு ஹிப்ரு தீர்க்க தரிசியின் திவ்ய தரிசனங்களும் அவரது நூல்களில் ஜொலிக்கின்றன.

2. பரோபகாரத்துக்கு தியாகத்துக்கும் டால்ஸ்டாய் ஒரு திருஷ்டாந்த புருஷராய் விளங்கினுர். இவை ஒரு உண்மை மகானின் லக்ஷணங்க ளல்லவா? இந்தப் பரோபகாரத்துக்கும் தியாகத்துக்கும் தடையாக விருந்தவைகளை யெல்லாம் அவர் தைரியமாகவும் சந்தோஷமாகவும் ஒழித்தார். ஒரு ஏழைக் குடியானவன் உருவத்திலுள்ள அவரது படம் எல்லா ருஷியக் குடியானவன் வீட்டிலும் இன்றும் அழகு செய்து விளங்குகிறது. ருஷ்யக் குடியானவர்களுக்கு டால்ஸ்டாயே தெய்வம். வறுமையில் செம்மைகண்ட செயிண்டு பெனிடிக்கு, செயிண்டு பிரான்சிஸ் முதலிய ஐரோப்பிய தியாக மூர்த்திகளின் சரிதையை டால்ஸ்டாய்

தம் வாழ் நாளில் அனுஷ்டித்துப் பிரத்... சப் படுத்தினர்.

3. விவசாயத்தின் மேன்மையையும் அவர் செவ்வையாக உணர்ந்திருந்தார். எனவே உழவனை அவர் ஒரு மாத்ருகா புருஷனாக மதித்தார். "உழுதுண்டு வாழ்வதே" உத்தம வாழ்க்கை யெனக் கருதினர். இந்திரபோகம் அனுபவித்த மனிதன் எளிய வாழ்க்கை விரும்பி மண்ணுலகத்துக்கு இறங்கி வருவதுபோல், பிரபு குடும்பத்தில் பிறந்த அவர் உழவன் வாழ்க்கையை மேற்கொண்டு தன் கையால் உழுது, மெய் வியர்க்க வேலை செய்து எளிய வாழ்க்கை வாழ்ந்தார். நமது இந்திய மகான்களும், சாதுக்களும், மடாதிபதிகளும், மகந்துக்களும் டால்ஸ்டாயிடம் பாடம் கற்றுக்கொள்ள முன்வந்தால் இந்தியா பொன்னுலகம் ஆகுமென்பது உறுதி. "தியானம், தவம்" முதலிய சோம்பல் வாழ்வினுல் உலகத்துக்கு ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை. உழைப்பே உலகவெற்றிக்கு முதற் காரணம். தோட்டி முதல் தொண்டமான் வரை உழைத்தே தீரவேண்டும். மகான்களும் உழைக்கத்தான் வேண்டும். உழைப்பற்ற வாழ்வு உப்பில்லாக் கூழுக்கு ஒப்பாகும். அறிவிற் பெரியாரான வள்ளுவரும் நெய்தற் றொழில் செய்து வாழ்நாள் நடத்தியதை உற்று நோக்குமின்!

4. செல்வர்களை அவர் அறவே வெறுத்தார். மண்ணாசை பொன்னாசை முதலியவைகளைப் பகைத்தார். துரைத்தனங்களையும் அவர் போற்றவில்லை. சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் சக காணம் (ஒத்துழைப்பு) முதலியவைகளை அவர் உலகத்துக்கு உபதேசம் செய்தார். அதனுல் அவர் குரோபாட்கின் என்பவரைப்போல் அராஜகவாதி என்றும் பலர் தப்பாக எண்ணினர். மகாத்மாவைப்போல் டால்ஸ்டாயும் அஹிம்ஸா தர்மத்தில் உறுதியான நம்பிக்கை யுடையவர். குரோபாட்கின் தேவையானுல் ஹிம்ஸை வழிகளையும் பின்பற்றலாமென்று உபதேசம் செய்தார். எனவே டால்ஸ்டாயைச் சிலர் குரோபாட்கினுக்கு ஒப்பிட்டது அறியாமையாகும். துரைத்தனத்தை அவர் எப்பொழுதும் மிகவன்மையாகத் தாக்கி வந்தனர். எனினும் துரைத்தனத்தார் அவரைச் சிறைப் படுத்தவில்லை. ருஷியத் தலைவர்களில் சிறை புகாதவர் அவர் ஒருவரேயாகும். ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்த முண்டானபோது அவர் ஜனங்களுக்குப் பின்வருமாறு உபதேசம் செய்தார். "ருஷிய ஜனங்களுக்கும் ஜப்பான் ஜனங்களுக்கும் பரஸ்பர விரோதம் எதுவு மில்லை. இரு தேசத்து மன்னர்களுக்குள்ளேயே பகை ஏற்பட்டிருக்கிறது. வேண்டுமானுல் ருஷிய சக்கரவர்த்தியான ஜாரும் ஜப்பான் சக்கரவர்த்தியான மிக்காடோவும் தத்தம் உத்தியோகஸ்தர்களுடன் நேர்முகமாக எதிர்த்துச் சண்டைசெய்து மடிந்து போகட்டும். ஏழைகளான ஜனங்கள் எதற்காகப் போர்க்கோலம் கொண்டு இறக்க வேண்டும்."

இவ்வாறு அவர் ஜனங்களுக்கு உபதேசம் செய்தும் ருஷிய சக்கரவர்த்தி அவரைச் சிறையிலடைக்கவில்லை. அவரை அராஜகக் கிளர்ச்சிக்காரன் என்று குறை கூறவுமில்லை. அவருக்கு ருஷியாவிலும் மற்றும் ஐரோப்பிய தேசங்களிலும் அவ்வளவு உயரிய மதிப்பு ஏற்பட்டிருந்தது. என்வே அவரைச் சிறைப் படுத்த ருஷிய சர்க்கார் துணியவில்லை.

டால்ஸ்டாய் உலகப் பிரசித்தி பெறுவதற்கும், உலக மக்களெல்லாம் அவரைப் போற்றுவதற்கும் மேலே கூறிய உத்தம குணங்களே முக்கிய காரணங்களாகும். டால்ஸ்டாய் உபதேசங்கள் ஜக முழுதும் பரவுவ தாக!

நமது சைவ சமயத்தில் ஜாதிப்பிரிவுகள் கிடையா; உயர்வு தாழ்வு என்ற வித்தியாசங்களும் கிடையா.

கா. சுப்ரமண்ய பிள்ளை, எம். ஏ; எம். எல்.

உங்கள் எதிர் காலம்! ஓம் சிவகுகமயம். எங்கள் வாய்மை!

தேவ ரகசியம்.

பல கன தனவான்களால், இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலமான மூன்று காலப் பலன்களின் உண்மையை, உள்ளபடியே உரைக்கும் "பிர்ம்ம எழுத்தறிந்தவர்" எனப் போற்றப்படும் எங்களிடம் ஒரு முறை—உங்கள் ஜாதக நகலையோ, கடிதமெழுதும் நேரத்தையோ அனுப்பி உங்கள்பலனை அறிந்து சந்தோஷியுங்கள்.

இதுவரை 78-ஆயிரம் ஜாதகங்களின் ராசி பலன் சொல்லி நற்பெயரும், அனுபவமும் பெற்றிருக்கிறோம்.

உண்மையான உங்கள் நிலையும்-எதிர்கால நடப்பின் போக்கும்-எங்கள் ஆச்சர்யத்தக்க மொழிகளால், நீங்கள் உணர்ந்து மேன்மேலும் சிபார்சு செய்து ஆதரிப்பீர்க ளென்பது நிச்சயம்.

1-வருடப்பலன் சுபாவ பாவ குணத்துடன்	ரூ. 2-0-0
வயது, உத்தியோகம், பொருள், ஞானம், புத்திரவிருத்தி, களத்திரம், வியாபாரம் முதலிய பன்னிரண்டு பாவங்களின் பலன்கள் எழுத	ரூ. 5-0-0
புதிதாய்ப் பிறந்த குழந்தைக்குப் புதிய ஜாதகம் கணிக்க	ரூ. 3-0-0
இரண்டு வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு "பாலரிஷ்ட தோஷ நிவர்த்தினி தாழ்த்து"	ரூ. 2-0-0
ஆயுள் பூரா பலன் எழுத	ரூ. 25-0-0

வி. பி. செலவு இனம். வெளி நாட்டு நேயர்கள் முன் பணம் அனுப்ப வேண்டும்.

புரபோசர் நம்பி,
வராஹ மிஹிரா சோதிட நிலயம்,
46, சாமிநாயக்கன் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பலவுள்ளதால், நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களா யிராமல் விவரமாகவும் சாஸ்திரீக மாகவு மிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதமெழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மலையாள மல்லிகை விதை

மலையாள மல்லிகை புஷ்பங்கள் மனோகரமான வாசனை யுடையவை. செடி 6 அடி உயரம் வளரும். ஒவ்வொரு செடியிலும் தினம் 500 புஷ்பம் வரை புஷ்பிக்கும். ஒவ்வொரு பூவும் 8 அங்குல சுற்றளவுடையது. நிறம் மஞ்சள். பங்களாக்களுக்கும் பூந் தோட்டங்களுக்கும் இச்செடி மிக அலங்காரமானது. தமிழ் நாட்டில் இதுவரை இந்தச் செடி பரவவில்லை. இந்தச் செடி வளரும் இடத்தில் பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் பிரவேசிக்க மாட்டா.

விதை பாக்கட்டு 1-க்கு ரூ. 0—4—0
1 டஜன் பாக்கட்டுக்கு ரூ. 2—8—0

ஒரு பாக்கெட்டுத் தேவை யுள்ளவர் 5 அணா ஸ்டாம்பனுப்பினுல் போதும்.

முந்துங்கள்! முந்துங்கள்! முந்துங்கள்!!!

எஸ். ஸி. நாதன்,
தோட்டக்கரை, எலப்புள்ளி P. O.
பாலக்காடு.

"ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப் பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாத சஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டு கோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகையும் வெளிவருகிறது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றி தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா? தத்துவ ஆராய்ச்சிகளா? கைத்தொழில் விளக்கங்களா? வியாபார ரகசியங்களா? விஞ்ஞானமா? (Science) கிராமச் சீர்திருத்தங்களா? சமூக இயல்புகளா? வைத்திய விசேஷங்களா? தேசீய தத்துவங்களா? சிறுகதைப் பகுதிகளா? இன்னிசைப் பாட்டுகளா? விநோதங்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3. 6 மாதசந்தா ரூ. 1-12-0 பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளி நாடுகட்கு வருட சந்தா ரூ. 4.

ஆனந்தபோதினி மாதப் பதிப்பு.

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது: எம் மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிக்க குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனும். வருட சந்தா தபாற்கூலி யுள்பட உள்நாடுக்கு ரூ. 1. வெளிநாடுக்கு ரூ. 1-4-0

சுக்கில வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வ முகூர்த்த "ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமைவாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன், பி.எ. (C. G. Rajan, B.A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும், ஜோதிடர்களும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்கள் நாழிகையோடு, மணி நிமிஷமும், நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுத்தி, [illegible] சாரங்கள், தசவிதப், பொருத்தங்கள், சகுனங்கள் நவநாயகர்கள் பலன் முதலியனவும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதயம், கிரக உச்சம், நவக்கிரக நிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய அதிக உபயோகமாகும்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட் டிருகின்றன. இவ்வருடப் பஞ்சாங்கம் 92 பக்கங்கள் கொண்டது.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2; 6-பஞ்சாங்கங்கள் அணா 8; 12-பஞ்சாங்கங்கள் அணா 14.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1-10-0 முந்தி அனுப்பி தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்புவோம். ரயில் சார்ஜ் உங்களைச் சேர்ந்தது.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

10 AU[illegible] 1929

லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா. ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

மலர் 6.	1929ஆம் பிப்ரவரிமீ, விபவஆம் மாசிமீ	இதழ் 5

தீந்தமிழ்ச் சிறப்பு.

(ஆசிரியர். மு. மாணிக்க நாயகரவர்கள்.)

1. தென்றல் மணங்கமழ—மலருந் தேமணச் சோலை மிக
ஒன்றிடும் பொற் பொதிகை—முனிவன் உள்ளங் கனிந்துவக்க
மன்று ணடம் புரியும்—முதல்வன் வகுத்த முறையாலே
இன்று வரைத் தமிழே!—நின்னுடை யின்னெழின் மிக்கிலங்கும்.

2. ஆர்க்ககுங் குணக் கடலே—குமரி யாகுங் கிழக்குதெற்கு
மேற்கிற் குடகுமலை—வேங்கடம் மேவிடும் யால் வடக்கா
நாற்புற வெல்லையுறங்—தமிழர் நாட்டிற் சிறந்தோங்கிக்
காக்குந் தமிழ் மொழியே!—நினையாங் காவா தொழிவோமோ?

3. வெள்ளைப் பணிபூண்டும்—உடலில் வெள்ளைத் துகிலுடுத்தும்
வெள்ளைக் கமலமதிற்—றினமும் மேவிடு மன்னைபதம்
விள்ளும் பெருஞ் சிறப்பைக்—கொண்டு[illegible] விளங்கிடும் வெண்டமிழே!
உள்ளிடி னுன்றனையே—மனத்து ளுவ[illegible]ணை கடக்கும்.

4. இன்பம் பெறவேண்டிற்—றமிழே யிங்[illegible] யோதிடுவோம்
அன்பு பெறவேண்டிற்—றமிழே அது[illegible]ரிடத்தே
துன்பந் தொலைவதற்குந்—தமிழே து[illegible]ன்றனையே
இன்பத் தமிழ்மொழியே—நின்னிய லிங்[illegible] குண்டுரைப்ப[illegible].

5. பண்டைப்பெருநூலில்—நின்னியல் பார்க்கத் தனியின்பம்
அண்டும் வடமொழிகள்—அற்றைநா ளனுப யில்லையம்மா!
கண்டை நிகர்மொழியே!—இன்று நீ கலச் மெய்திடவே
பண்டை யயன்மொழிக—ளுன்னைத்தா னலைத்தழிக் குதையோ?

224253 சென்னை-600 008

224253

டால்ஸ்டாய்

ஆசிரியர்.

உலகத்தில் அதர்மம் தலை தூக்கும்பொழுது, ஒவ்வொரு உத்தமர் தோன்றி அதன் வன்மையைக் குறைப்பது இயல்பு. ஐரோப்பா ஜட தத்துவக் கொள்கையில் ஆழ்ந்து, அழிய நேர்ந்தபோது கடவுள் நெறி உணர்த்த டால்ஸ்டாய் அவதரித்தார். அவர் இந்தியாவிலே வாழ்ந்திருந்தால் ஒரு மகரிஷியாகப் பாவிக்கப் பட்டிருப்பார். அவர் ஒரு வெறும் நூலாசிரியராக மட்டும் உலகில் புகழ்பெறவில்லை. உண்மையில் அவர் ஒரு கர்மயோகியாக விளங்கினர். உலகப் பெரியாராகிய மகாத்மா காந்தி டால்ஸ்டாயை குருநாதனைக் கொண்டிருக்கிறார் என்றால் டால்ஸ்டாயின் பெருமையை விரித்துரைக்கவும் வேண்டுமா?

அம் மகான் 1828-ல் பிறந்தார். இப்ஸன் என்ற பெயர் பெற்ற நாடக ஆசாரியரும் அதே வருஷத்தில் ஸ்வீடனில் ஜனனமானர்.

உத்தமனுன் அவரது வாழ்நாளும் சுகதுக்க பூரிதமாகவே இருந்துவந்தது. ஏனைய பெரியோர்கள் போலவே அவரும் சுதேசத்தவரால் அவர் காலத்தில் தூற்றப்பட்டார். ஆனல் ஒருவரது பெருமை அவர் மறைந்த பிறகே பிரகாசிக்கத் தொடங்கும். அவ்வண்ணமே சென்ற வருஷத்தில் அவரது சதாப்த ஜயந்தி கொண்டாடப் பெற்றபொழுது ஐரோப்பா முழுதும்—அன்று மேனடு முழுதும்—அவரது பெருமையைப் புகழ்ந்து பாராட்டிற்று.

பல விஷயங்களில் அவர் மகா பாக்கியவானய் விளங்கினர். முதன் முதலாக அவர் தீர்க்காயுளுடையவரா யிருந்தார். இரண்டாவதாக அவர் ஒரு ருஷியப் பிரபு. ஏனைய பெரியார்களைப் போல் அவர் வறுமையின் கொடுமையை அறியவில்லை. செல்வத்திலேயே பிறந்து செல்வத்திலேயே வளர்ந்த அந்தப் புண்ணிய புருஷர் தாமாகவே எளிய வாழ்க்கையைப் பெருவகையோடு மேற்கொண்டார். தான் பெற்றிருந்த செல்வத்தை, சொந்த சுகபோக விஷயத்தில் அவர் செலவு செய்யவில்லை. தாம் உண்மை யெனக் கண்ட விஷயங்களை லோகோபகாரார்த்தம் உலக முழுதும் பரப்பவும், எளியார் வாழ்க்கையை விருத்தி செய்யவும் அவர் தம் திரண்ட செல்வத்தைச் செலவு செய்தார். திரவியத்தை அவர் தன் அடிமையாக வைத்து நடத்தினரேயன்றி, ஏனைய சீமான்களைப் போல் அவர் திரவியத்துக்கு அடிமையாக வாழவில்லை.

பிரபு குடும்பத்தில் பிறந்த அவர் எளியார் வாழ்க்கையை மேற்கொள்ள பகீரதப் பிரயத்தனம் செய்யும்படி நேர்ந்தது. அம்மட்டில் அவரது பிரபு குடும்ப ஜனனம் அவருக்குத் துன்பத்தைக் கொடுத்ததென்றே சொல்லலாம். பொற் கிண்ணத்தில் அறுசுவை அடிசில் உண்டு ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் வீற்றிருக்கப் பிறந்த டால்ஸ்டாய், உழவர் வாழ்க்கையை மேற்கொள்ளவும், அவர்களுடன் கூடி வாழவும், எளிய உழவர்களைப்போல் உழைக்கவும், எளிய உணவுண்ணவும் பழக வெகு பிரயாசைப் பட்டார். பிரபு குடும்பத்தில் பிறக்காத சாமானியருக்கு இத்தகைய தியாகத்துக்குத் தேவையே யில்லை. மகுட மன்னராய்ப் பிறந்த சித்தார்த்தர், நாடு நகர் துறந்து, மனைவி மக்களைத் துறந்து, உற்றார் பெற்றார் உறவினரைத் துறந்து, சந்யாசம் பூண்டு பௌத்த மதத்தை உலகத்துக்குப் போதித்ததுபோலவே, பிரபுவான டால்ஸ்டாயும் இல்லறத் துறவியாகி, எளிய வாழ்வின்—இயற்கை வாழ்வின் பெருமையைத் தாமே அனுஷ்டித்துக் காட்டினர்.

பிரபு குடும்ப ஜனனம் அவருக்கு துர்ப்பாக்கியமாக இருந்ததுபோலவே இல்லற வாழ்வும் அவருக்குத் துன்பகரமாகவே இருந்தது. அவர் 13 குழந்தைகளுக்குத் தந்தை யானர். குழந்தைகளை யெல்லாம் அவர்களது அந்தஸ்துக்குத் தக்கபடி வளர்த்தார். அவர்களது பிரபு குடும்ப நிலைக்கு ஏற்ற கல்வியும் கற்பித்தார். ஆனல் அவர் செல்வ வாழ்க்கையைத் துறந்து எளிய வாழ்க்கையை மேற்கொள்வது அவரது மனைவியாருக்குப் பிடிக்கவில்லை, "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதைகள்" வாய்ப்பது உலகத்திலே அபூர்வ மல்லவா? பர்த்தாவுக்கேற்ற பதிவிரதைகள் வாய்க்காது உலகத்திலே வாழ்க்கை நலமிழந்த பெரியார் அநே

பிரபஞ்ச சுகத்திற்கு திவ்ய ஔஷதம்! 24-மணி நேரத்தில் அபூர்வகுணம்.

காமபந்து

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒருமாத்திரை பாலில் சாப்பிட்டால் வீர்யம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 24-மணி நேரத்திற்குள் அதிசயமான சம்சார சுகத்தைக் கொடுக்கும். இதற்கு பழம், பால், தயிர், முட்டை, பாதம் முதலியவை சாப்பிடலாம்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்யநஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவருமல் கட்டுப்படுத்தும், இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் துரப்பியாசத்தினு லுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரியவரும். கடிதங்களை ரக்ஷ்யமாய் வைக்கப்படும்.

20-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 1.

வி. பி. தபால் சார்ஜ் வேறு.

60 மாத்திரை ரூ. 5. (தங்கம் கலந்தது)

ஹோல் மான்யூ பாக்சரர்:—

பூஷண வைத்தியசாலை,

12, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு, மதராஸ்.

சுய ராஜ்யம்! சுய ராஜ்யம்!! சுய ராஜ்யம்!!!

எப்படி வரும்?

நம்மை நாமே சுயராஜ்யத்துக்குத் தகுதியுடையவர்கள் ஆக்கிக் கொள்ளவேண்டும்.

எப்படி ஆக்குவது?

அமெரிக்கா அல்லது புது உலக சரிதம் என்ற நூலைப் படித்தால்

தகுதியுடையவர்க ளாகலாம்.

இந்நூல்

பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதிராய் எழுதிய "அமெரிக்கா" என்ற ஆங்கில நூலைத் தழுவி எழுதப் பட்டது.

இப்பொழுது அச்சிலிருக்கிறது. உயர்ந்த அண்டிக் காகிதம். சிறந்த அச்சு. ஏப்ரல் மாதம் வெளி வரக் கூடும்.

ஆர்டரை இப்பொழுதே ரெஜிஸ்டர் செய்யுங்கள்.

விலை விவரம் பின்னால் தெரிவிக்கப் படும்.

முத்தையா புக் டிப்போ,

தபாற்பெட்டி 99, சென்னை.